**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 40** **நாள் : 15.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கிடையே நடத்தப்பட்ட அறிவியல் போட்டிகளில் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவாக சிங்கப்பூர் அழைத்து செல்லப்படவுள்ள 32 சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று வழங்கினார்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கிடையே நடத்தப்பட்ட அறிவியல் போட்டிகளில் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவாக சிங்கப்பூருக்கு அழைத்து செல்லப்பட உள்ள 32 சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று (15.02.2019) அண்ணாநகர் மண்டலம், செனாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை, சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் மற்றும் சிறப்பு தொழிற்பயிற்சிக்கான அறக்கட்டளை அமைப்பும் இணைந்து "Wings to fly" என்ற திட்டத்தின் மூலம் மாணவர்களின் அறிவியல் சார்ந்த அறிவுத்திறனை வளர்க்கும் வகையில் கடந்த மூன்று ஆண்டுகளாக பலவகையான அறிவியல் சார்ந்த போட்டிகள் நடத்தி வெற்றிபெறும் மாணவ/மாணவியர்களை அயல்நாடுகளுக்கு கல்விச்சுற்றுலாவாக அழைத்துச் சென்று வருகின்றனர்.

கடந்த 2016ஆம் ஆண்டு மலேசியாவுக்கும், 2017ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டிற்கும், 2017–18ம் ஆண்டு அமெரிக்கா நாட்டில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கும் மாணவ, மாணவியர்கள் கல்விச்சுற்றுலா சென்று வந்தனர்.

அதேபோல், 2018–19 கல்வியாண்டில் நடைபெற்ற அறிவியல் போட்டிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 7000 மாணவ/மாணவியர்களுக்கு முதற்கட்ட அறிவியல் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் 280 மாணவ, மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டு இறுதி போட்டிக்கு தகுதிபெற்றனர். இவர்களில் அறிவியல் சார்ந்த மாதிரி படைப்புகளை உருவாக்கி சிறப்பாகவும், தெளிவாகவும் விளக்கியவர்களில் 32 மாணவ/மாணவியர்கள் வெற்றி பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர்.

இந்த 32 மாணவ, மாணவியர்களும் வருகின்ற கல்வியாண்டில் கல்விச்சுற்றுலாவாக சிங்கப்பூர் அழைத்து செல்லப்பட உள்ளனர். இவர்களுக்கு ஆணையாளர் அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று வழங்கினார்கள். மேலும், இப்போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

முன்னதாக, ஆணையாளர் அவர்கள் சென்னைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் உருவாக்கிய அறிவியல் சார்ந்த மாதிரி படைப்புகளைப் பார்வையிட்டு, அவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 2 உண்டு உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் உணவு மற்றும் கல்வி பயன்பாட்டிற்காக ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களிடம் சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் மற்றும் சிறப்பு தொழிற்பயிற்சிக்கான அறக்கட்டளை அமைப்பும் இணைந்து வழங்கியது. ஏற்கனவே ரூ.10 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், சிங்கப்பூர் துணை தூதரகப் பிரதிநிதி திரு.இவான் டோன், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் மாவட்ட ஆளுநர் திரு.பாபு பிரேம், விங்ஸ் டு பிளை தலைவர் திரு.வி.ஆர்.ஷாகித் குமார், கூடுதல் கல்வி அலுவலர், உதவி கல்வி அலுவலர்கள், சென்னை கிழக்கு ரோட்டரி கிளப் பிரதிநிதிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**